சுருக்கம்

ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை – சட்டமன்றப் பேரவை விதி எண் 110–ன் கீழ் 2014–2015 ஆம் ஆண்டுக்கான ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறை குறித்த மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் அறிவிப்புகள் – கடலூர் மாவட்டம், கூடுவெளி கிராமத்திலும், திருவள்ளூர் மாவட்டம், செவ்வாப்பேட்டையிலும் இரண்டு பல்தொழில்நுட்பக் கல்லூரிகள் தொடங்குதல் – நிர்வாக ஒப்புதல் வழங்குதல் – ஆணைகள் வெளியிடப்படுகின்றன.

---

ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் (ஆதிந 7) துறை

அரசாணை (நிலை) எண். 111 நாள் : **25.09.2015**

மன்மத, புரட்டாசித் திங்கள் 8 ஆம் நாள்,
திருவள்ளுவர் ஆண்டு 2046

படிக்கப்பட்டது:-

ஆதி திராவிடர் நல இயக்குநரின் கடித ந.க.எண். க2/21422/ 2014, நாள் 10.11.2014, 29.12.2014 மற்றும் 20.03.2015.

******

ஆணை:–

மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் 31.07.2014 அன்று சட்டமன்றப் பேரவையில், தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை விதி எண். 110–ன் கீழ் ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை தொடர்பாக சில அறிவிப்புகளை வெளியிட்டார்கள். அவற்றில் பின்வரும் அறிவிப்பும் அடங்கும்:–

> 10 மற்றும் 12 ஆம் வகுப்பு முடித்த மாணவ, மாணவியர்கள் தொழிற்நுட்பக் கல்வி பயில ஏதுவாக கடலூர் மாவட்டம், நந்தனார் ஆதி திராவிடர் நல மேல்நிலைப்பள்ளி வளாகத்திலும், திருவள்ளூர் மாவட்டம், செவ்வாப்பேட்டை ஆதி திராவிடர் நல மேல்நிலைப்பள்ளி வளாகத்திலும் இரு தொழிற்நுட்பக் கல்லூரிகள் ரூ.24.60 கோடி செலவில் தொடங்கப்படும்.

2. மேற்காணும் அறிவிப்பு குறித்து, தொழில்நுட்பக் கல்வி ஆணையர் அவர்களிடமிருந்து பெறப்பட்ட கருத்துருவின் அடிப்படையில், ஆதி திராவிடர் நல இயக்குநரால், இரண்டு பல்தொழில்நுட்பக் கல்லூரிகள் தொடங்குவதற்கான அகில இந்திய தொழில்நுட்பக் கல்விக் குழுமத்தின் (AICTE) வரைமுறைகள், தேவைப்படும் உட்கட்டமைப்பு வசதிகள் (கட்டிடம், உபகரணங்கள், ஆசிரியர் மற்றும் அலுவலகப் பணியாளர்கள்) மற்றும் தொடரும் / தொடராச் செலவினம் குறித்து கீழ்க்கண்டவாறு விரிவான கருத்துரு அனுப்பப்பட்டுள்ளது:-

- அகில இந்திய தொழில்நுட்பக் கல்விக் குழுமத்தின் வரையறைப்படி, ஒரு பல்தொழில்நுட்பக் கல்லூரி துவங்குவதற்கு குறைந்தபட்சம் 5 ஏக்கர் நிலம் தேவைப்படும். எனினும், எதிர்காலத்தில் விரிவாக்கத்தினைக் கருத்தில் கொண்டு 10 ஏக்கர் நிலம் அவசியம் எனக் கருதப்படுகிறது. எனவே, இரண்டு பல்தொழில்நுட்பக் கல்லூரிகள் துவக்குவதற்கு ஒவ்வொரு கல்லூரிக்கும் 10 ஏக்கர் நிலம் கண்டறியப்பட வேண்டும்.

- அவ்வாறு கண்டறியப்பட்ட நிலம் தொடர்ச்சியாக இருக்க வேண்டும்.

- மேற்கண்ட நிலம், தேசிய/மாநில நெடுஞ்சாலையிலிருந்து உரிய வகையில் இணைக்கப்பட்டிருக்க வேண்டும்.

- பல்தொழில்நுட்பக் கல்லூரி துவக்குவதற்காக கண்டறியப்பட்ட நிலத்தின் குறுக்கே கால்வாய், உயர் அழுத்த மின்தடம், நெடுஞ்சாலை வழிகள், இருப்புபாதைகள் போன்ற தடைகள் இல்லாமல் இருப்பதுடன் மேற்கண்ட நிலமானது வேறு எந்த பெருந்திட்டத்திற்கும் தேர்வு செய்யப்பட்டிருக்க கூடாது.

- தேர்வு செய்யப்பட்ட நிலமானது மாவட்ட தலைநகருக்கு அருகிலும், துறைமுகங்கள், நகர்ப்புறங்கள் மற்றும் தொழில் மையங்களுக்கு அருகிலும், அடிப்படை வசதிகளான போக்குவரத்து, மருத்துவமனைகள், வணிக வளாகங்கள், உணவகங்கள் போன்ற வசதிகளை எளிதில் பெறும் வகையிலும் தேர்ந்தெடுக்கப்படுவது உகந்ததாகும்.

- தேர்ந்தெடுக்கப்பட்ட நிலமானது எதிர்கால விரிவாக்கத்தைக் கருத்தில் கொண்டு பன்அடுக்கு கட்டிடங்கள் கட்டுவதற்கு தகுதியுடையதாக இருக்க வேண்டும்.

- ஆதி திராவிடர் நலத்துறையால் கண்டறியப்பட்ட நிலமானது தொழில்நுட்பக் கல்வித் துறைக்கு மாற்றப்பட வேண்டும்.

புதிதாக துவக்கப்படவுள்ள பல்தொழில்நுட்பக் கல்லூரிகளில் ஆங்கிலத்தை பயிற்று மொழியாகக் கொண்டு பின்வரும் பாடப்பிரிவுகள் துவங்கப்படும் :–

| வ. எண். | பாடப்பிரிவு | ஒப்பளிக்கப்பட்ட மாணாக்கர்களின் எண்ணிக்கை |
|---|---|---|
| 1. | சிவில் என்ஜினியரிங் | 60 |
| 2. | மெக்கானிக்கல் என்ஜினியரிங் | 60 |
| 3. | எலக்ட்ரிகல் & எலக்ட்ரானிக்ஸ் என்ஜினியரிங் | 60 |
| 4. | எலக்ட்ரானிக்ஸ் & கம்யூனிகேஷன் என்ஜினியரிங் | 60 |
| 5. | கம்ப்யூட்டர் என்ஜினியரிங் | 60 |
| | மொத்தம் | 300 |

ஒரு புதிய பல்தொழில்நுட்பக் கல்லூரி துவங்குவதற்கான செலவின விவரம் பின்வருமாறு:-

(ரூபாய் இலட்சத்தில்)

| வ. எண். | விவரம் | செலவினம் | | | |
|---|---|---|---|---|---|
| | | முதல் வருடம் | இரண்டாம் வருடம் | மூன்றாம் வருடம் | மொத்தம் |
| தொடரும் செலவினம் | | | | | |
| 1. | ஆசிரியர்கள் மற்றும் பணியாளர்களின் ஊதியம் | 358.93 | 621.66 | 890.79 | 1871.35 |
| தொடராச் செலவினம் | | | | | |
| 2. | உபகரணங்கள் | 8.00 | 86.00 | 95.00 | 189.00 |
| 3. | கணினிகள் | 17.00 | 81.00 | 45.00 | 143.00 |
| 4. | மரச்சாமான்கள் | 15.00 | 35.00 | 28.00 | 78.00 |
| 5. | நூலக புத்தகங்கள் மற்றும் மின்புத்தகங்கள் | 10.00 | 18.00 | 12.00 | 40.00 |
| | மொத்தம் | 50.00 | 220.00 | 180.00 | 450.00 |
| | கட்டிடப் பணிகள் | 3251.98 | | | 3251.98 |
| | பெருமொத்தம் | 3660.88 | 841.66 | 1070.79 | 5573.33 |
| | 2015–2016 ஆம் ஆண்டிற்கு 10% கூடுதல் செலவு | 366.09 | 84.16 | 107.08 | 557.33 |
| | மொத்தம் | | | | 6130.66 |

புதிதாக துவக்கப்படவுள்ள பல்தொழில்நுட்பக் கல்லூரிகளில் முதல் வருடம் வகுப்புகள் துவங்குவதற்கு முன் அகில இந்திய தொழில்நுட்பக் கல்விக் குழுமத்தின் ஒப்புதல் பெறப்பட வேண்டும் என்றும், அகில இந்திய தொழில்நுட்பக் கல்விக் குழுமத்தின் வரையறைப்படி முதல் ஆண்டுக்குரிய கட்டிடங்கள் மற்றும் கல்விக்கான அடிப்படை வசதிகள் நிறைவு பெற்றிருக்க வேண்டும் என்றும் தொழில்நுட்பக் கல்வி ஆணையரால் தெரிவிக்கப்பட்டுள்ளது.

3. மேலும், அகில இந்திய தொழில்நுட்பக் கல்விக் குழுமத்தின் வரையறைப்படி கடலூர் மாவட்டம், சிதம்பரம் நந்தனார் அரசு ஆதி திராவிடர் நல மேல்நிலைப்பள்ளி வளாகத்தில் பல்தொழில்நுட்பக் கல்லூரி தொடங்குவதற்கு போதுமான இட வசதி இல்லை என்றும், ஆதி திராவிடர் இன மக்களுக்காக தானமாக வழங்கப்பட்ட சுமார் 47 ஏக்கர் 18 செண்ட் நஞ்சை நிலம், சிதம்பரத்திலிருந்து வீராணம் ஏரிக்கு செல்லும் இடத்தில் சிதம்பரத்திலிருந்து சுமார் 8 கி.மீ தூரத்தில் காட்டுமன்னார்கோவில் வட்டத்தைச் சேர்ந்த கூடுவெளி கிராமத்தில் உள்ளதெனவும், அந்த நிலத்தில் சர்வே எண். 111/2, 3, 4, 5–ல் 3 ஏக்கர் 24 செண்ட் மற்றும் சர்வே எண். 120/1–ல் 5 ஏக்கர் 1 செண்ட், ஆக மொத்தம் 8 ஏக்கர் 25 செண்ட் நிலம் உள்ளதென்றும், அதில் பல்தொழில்நுட்பக் கல்லூரி கட்ட 6 ஏக்கர் 79 செண்ட் நஞ்சை நிலத்தைப் பயன்படுத்திக் கொள்ளலாம் என்றும், மேற்படி புலங்கள் நஞ்சையாக வகைப்படுத்தப்பட்டிருப்பினும், கடந்த 15 ஆண்டுகளாக சாகுபடி ஏதும் செய்யப்படவில்லை என்றும், இந்நிலத்தின் உரிமையாளர் தனது தானப்பத்திரத்தில் மேற்படி புலத்தினை ஆதி திராவிடர் இன மக்களுக்கு வீடு கட்டிக் கொள்ளவோ அல்லது அவர்களின் குழந்தைகளின் கல்வி நலனுக்காக பள்ளி மற்றும் கல்லூரி அமைத்து பயன்படுத்திக் கொள்ளவோ விருப்பம் தெரிவித்துள்ளார் என்றும் தெரிவித்து, கடலூர் மாவட்டம், சிதம்பரம் நந்தனார் அரசு ஆதி திராவிடர் நல மேல்நிலைப்பள்ளி

வளாகத்தில் அமைக்க உத்தேசிக்கப்பட்ட பல்தொழில்நுட்பக் கல்லூரியை, கடலூர் மாவட்ட ஆட்சியரால் மாற்று இடமாகத் தேர்வு செய்யப்பட்டுள்ள கூடுவெளி கிராமத்தில் அமைக்கலாம் என்று ஆதி திராவிடர் நல இயக்குநர் தெரிவித்துள்ளார்.

4. அதேபோல், திருவள்ளூர் மாவட்டம், செவ்வாப்பேட்டை அரசு ஆதி திராவிடர் நல மேல்நிலைப்பள்ளி வளாகத்தில் பல்தொழில்நுட்பக் கல்லூரி துவக்க போதுமான இடவசதி இல்லாத காரணத்தால் இப்பள்ளிக்கு அருகாமையில் 1 கி.மீ. தூரத்தில் உள்ள மேய்க்கால் புறம்போக்கு நிலம் சர்வே எண்.110–ல் 3.26.0 எக்டேர் மற்றும் 113–ல் 1.72.0 எக்டேர், ஆக மொத்தம் 4.98.0 எக்டேர் நிலம் மாற்று இடமாகத் தேர்வு செய்யப்பட்டுள்ளதென்றும், மேற்படி நிலத்தை வருவாய் துறைக் கணக்கிலிருந்து ஆதி திராவிடர் நலத் துறைக்கு மாற்றம் செய்ய நடவடிக்கை எடுக்கப்பட்டு வருவதாகவும் தெரிவித்து, கடலூர் மாவட்டம், காட்டுமன்னார்கோவில் வட்டம், கூடுவெளி கிராமத்திலும், திருவள்ளூர் மாவட்டம், செவ்வாப்பேட்டை கிராமத்திலும் இரண்டு பல்தொழில்நுட்பக் கல்லூரிகள் தொடங்க ஆணை வெளியிடும்படி ஆதி திராவிடர் நல இயக்குநர் அரசைக் கோரியுள்ளார்.

5. ஆதி திராவிடர் நல இயக்குநரின் கருத்துரு அரசால் கவனமுடன் ஆய்வு செய்யப்பட்டது. அதன் அடிப்படையில், கடலூர் மாவட்டம், சிதம்பரம் நந்தனார் அரசு ஆதி திராவிடர் நல மேல்நிலைப்பள்ளி வளாகத்திலும், திருவள்ளூர் மாவட்டம், செவ்வாப்பேட்டை அரசு ஆதி திராவிடர் நல மேல்நிலைப்பள்ளி வளாகத்திலும் பல்தொழில்நுட்பக் கல்லூரிகள் தொடங்குவதற்கு போதிய இடவசதி இல்லாத காரணத்தாலும், இரண்டு பல்தொழில்நுட்பக் கல்லூரிகள் தொடங்குவதற்கு ஆதி திராவிடர் நல இயக்குநரால் மாற்று இடங்கள் பரிந்துரை செய்யப்பட்டுள்ள நிலையிலும், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களால் தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை விதி எண் 110–ன் கீழ் வெளியிடப்பட்ட அறிவிப்பினைச் செயல்படுத்தும் வகையில், கடலூர் மாவட்டம், காட்டுமன்னார்கோவில் வட்டம், கூடுவெளி கிராமத்திலும், திருவள்ளூர் மாவட்டம், செவ்வாப்பேட்டை கிராமத்திலும், சிவில் என்ஜினியரிங், மெக்கானிக்கல் என்ஜினியரிங், எல்க்ட்ரிகல் மற்றும் எலக்ட்ரானிக்ஸ் என்ஜினியரிங், எலக்ட்ரானிக்ஸ் மற்றும் கம்யூனிகேஷன்ஸ் என்ஜினியரிங் மற்றும் கம்ப்யூட்டர் என்ஜினியரிங் ஆகிய பாடப்பிரிவுகளைக் கொண்டு, மொத்தம் ரூ.111,46,66,000/– (ரூபாய் நூற்று பதினோரு கோடியே நாற்பத்தாறு இலட்சத்து அறுபத்து ஆறாயிரம் மட்டும்) செலவில் இரண்டு புதிய பல்தொழில்நுட்பக் கல்லூரிகள் தொடங்க நிருவாக அனுமதி அளித்து அரசு ஆணையிடுகிறது.

6. மேலே பத்தி 5–இல் நிர்வாக ஒப்பளிக்கப்பட்ட செலவினம் கோரிக்கை எண் 04, துறை கோடு: 02–இல் தோற்றுவிக்கப்பட்டுள்ள கீழ்க்கண்ட புதிய கணக்குத் தலைப்புகளின் கீழ் பற்று வைக்கப்பட வேண்டும்:-

<u>இரண்டு பல்தொழில்நுட்பக் கல்லூரிக்கான செலவினம்</u>

(i) "2225 ஆதி திராவிடர், பழங்குடியினர் மற்றும் ஏனைய பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் நலன்– 01. ஆதி திராவிடர் நலன் – 277. கல்வி – பன்னிரெண்டாம் ஐந்தாண்டு திட்டப்பணிகள் – II. மாநிலத் திட்டம் – KZ ஆதி திராவிடர் நல பல்தொழிற்நுட்பக் கல்லூரிகள் தொடங்குதல் –

01 சம்பளங்கள் – ரூ.37,42,70,000/–
(குதொகு 2225 01 277 KZ 0107)

05 அலுவலகச் செலவுகள்
05. அறைகலன்
(துதொகு 2225 01 277 KZ 0554) – ரூ. 1,56,00,000/–

19 இயந்திரமும் சாதனமும்
01. வாங்குதல்
(துதொகு 2225 01 277 KZ 1919) – ரூ. 3,78,00,000/–

68 புத்தகங்கள், நோட்டு புத்தகங்கள்,
சிலேட்டுகள் முதலியவற்றுக்காகும்
செலவு
(துதொகு 2225 01 277 KZ 6807) – ரூ. 80,00,000/–

76 கணினியும், துணை பாகங்களும்
01. வாங்குதல்
(துதொகு 2225 01 277 KZ 7619) – ரூ.2,86,00,000/–

(ii) "4225 ஆதி திராவிடர், பழங்குடியினர், ஏனைய பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் நலன் குறித்த மூலதனச் செலவு – 01. ஆதி திராவிடர் நலன் – 277. கல்வி – II. மாநிலத் திட்டம் – JQ ஆதி திராவிடர் நல பல்தொழில்நுட்பக் கல்லூரி கட்டடம் கட்டுதல் – 16. பெரும்பணிகள்
(துதொகு 4225 01 277 JQ 1601) – ரூ.65,03,96,000/–

7. மேற்கண்ட புதிய கணக்குத் தலைப்புகளுக்கு இயக்குநர், ஆதி திராவிடர் நலத் துறை, சென்னை – 5 அவர்கள் மதிப்பீடு, கணக்கு மற்றும் நேரமைப்பு கட்டுப்பாட்டு அதிகாரியாவார். கணக்குகளில் மேற்படி புதிய கணக்குத் தலைப்பினை தொடங்குமாறு சம்பந்தப்பட்ட சம்பளக் கணக்கு அலுவலர் / கருவூல அலுவலர் கேட்டுக் கொள்ளப்படுகிறார்.

8. மேலே பத்தி 5–இல் நிர்வாக ஒப்பளிக்கப்பட்ட செலவினம் ஒரு புதுப்பணி குறித்த செலவினமாகும். இதற்கு நாளடைவில் சட்டமன்றப் பேரவையின் ஒப்புதல் பெறப்பட வேண்டும். சட்டமன்றப் பேரவையின் ஒப்புதல் பெறப்படும் வரை இச்செலவினம் முதற்கண் எதிர்பாராச் செலவு நிதியிலிருந்து முன்பணம் மூலம் மேற்கொள்ளப்பட வேண்டும். இதற்கான முன்பணத்தினை அனுமதிக்கும் ஆணைகள் நிதித் (வரவு–செலவு பொது I) துறையில் தனியே வெளியிடப்படும். அடுத்து வரும் துணை மானியக் கோரிக்கையில் இச்செலவினம் இடம் பெறும் வரை எதிர்பாராச் செலவு நிதியிலிருந்து தேவையான தொகையினை சரியாகக் கணக்கிட்டு முன்பணமாக பெறுவதற்கு தேவையான விண்ணப்பத்தினை உரிய படிவத்தில், இவ்வாணையின் படிகளை இணைத்து நிதித் (வரவு–செலவு பொது I) துறைக்கு விண்ணப்பிக்குமாறு ஆதிதிராவிடர் நல இயக்குநர் கேட்டுக் கொள்ளப்படுகிறார். மேலும், இச்செலவினம் மீது சட்டப்பேரவையின் ஒப்புதல் பெறும் பொருட்டு 2015–2016 ஆம் ஆண்டின் துணை மதிப்பீடுகளில் சேர்த்திட ஏதுவாக துணை மானியக் குறிப்பு ஒன்றினை உரிய நேரத்தில் நிதித் (ஆதி(ம)பந) துறைக்கு அனுப்பிவைக்குமாறு ஆதிதிராவிடர் நல இயக்குநர் கேட்டுக் கொள்ளப்படுகிறார்.

9. புதிய பல்தொழில்நுட்பக் கல்லூரிகளை உடனடியாகத் தொடங்குவது குறித்து இயக்குநர், தொழில்நுட்பக் கல்வி அவர்களுடன் கலந்தாலோசித்து உரிய நடவடிக்கையினை மேற்கொள்ளுமாறு ஆதி திராவிடர் நல இயக்குநர் அறிவுறுத்தப்படுகிறார். மேலும்,

பல்தொழில்நுட்பக் கல்லூரிகள் தொடங்கப்பட்ட உடன் அது குறித்த அறிக்கையினை தவறாமல் அரசுக்கு அனுப்புமாறு ஆதி திராவிடர் நல இயக்குநர் அறிவுறுத்தப்படுகிறார்.

10. புதிதாகத் தொடங்கப்பட உள்ள இரண்டு பல்தொழில்நுட்பக் கல்லூரிகளிலும் குறைந்தபட்சம் 50 விழுக்காடு ஆதி திராவிடர் / பழங்குடியினர் / கிறித்துவ மதம் மாறிய ஆதி திராவிடர் மாணாக்கர்கள் சேர்க்கப்படுவதை உறுதிப்படுத்துமாறு ஆதி திராவிடர் நல இயக்குநர் மற்றும் தொழில்நுட்பக் கல்வி இயக்குநர் ஆகியோர் அறிவுறுத்தப்படுகிறார்கள்.

11. இவ்வாணை, அலுவல் சார்பற்ற எண். 304 (SEC Exp.)/AD&TW/2015-1, நாள் 25.09.2015–இல் நிதித் துறையின் ஒப்புதல் பெற்று வெளியிடப்படுகிறது. மற்றும் கூடுதல் நிதியொதுக்கப் பேரேடு எண் 952 (தொள்ளாயிரத்து ஐம்பத்து இரண்டு).

( ஆளுநரின் ஆணைப்படி )

ப. அண்ணாமலை
அரசு செயலாளர்

பெறுநர்
இயக்குநர், ஆதி திராவிடர் நலன், சென்னை – 5.
இயக்குநர், பழங்குடியினர் நலன், சென்னை – 5.
இயக்குநர், தொழில்நுட்பக் கல்வி இயக்ககம், சென்னை – 25.
மாவட்ட ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நல அலுவலர், கடலூர் / திருவள்ளூர்.
மாவட்ட கருவூல அலுவலர், கடலூர் / திருவள்ளூர்.
சம்பளக் கணக்கு அலுவலர் (கிழக்கு), சென்னை – 8.
முதன்மை மாநிலக் கணக்காயர், சென்னை – 18 / 35 (பெயரில்)

நகல்
முதலமைச்சர் அலுவலகம், சென்னை – 9.
ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை அமைச்சர் அவர்களின்
சிறப்பு நேர்முக உதவியாளர், சென்னை – 9.
ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை
அரசுச் செயலர் அவர்களின் தனிச் செயலாளர், சென்னை – 9.
நிதி (ஆதி (ம) பழ / வரவு–செலவு பொது I (ம) II / மைமஆபி) துறை, சென்னை – 9.
உயர்கல்வித் துறை, சென்னை – 9.
இருப்புக் கோப்பு / உதிரி நகல்கள்.

// ஆணைப்படி அனுப்பப்படுகிறது //

பிரிவு அலுவலர்
25/9/15